# வெற்றிடங்கள்

## திட்டப் பணியாளர்களை ஆட்சேர்த்தல்

**காலநிலை தாக்கங்களுக்கு முகங் கொடுக்கின்ற மற்றும் நவீனமயப்படுத்தப்பட்ட நீர்ப்பாசன விவசாய நடவடிக்கைகளின் ஊடாக உணவுப் பாதுகாப்பை மேலுயர்த்துவதை நோக்கமாகக் கொண்ட முன்னோடி மாதிரி உறுவமைப்பை செயற்படுத்துதல்**

**கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**

காலநிலை தாக்கங்களுக்கு முகங் கொடுக்கின்ற மற்றும் நவீனமயப்படுத்தப்பட்ட நீர்ப்பாசன விவசாய நடவடிக்கைகளின் ஊடாக உணவுப் பாதுகாப்பை மேலுயர்த்துவதை நோக்கமாகக் கொண்ட முன்னோடி மாதிரி உறுவமைப்பை செயற்படுத்துதல், 02/2026ஆம் இலக்க முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் (MSD) சுற்றறிக்கை மற்றும் அரசாங்க ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம், பின்வரும் பதவிகளுக்கு முழுநேர "ஒப்பந்த அடிப்படையில்" திட்டப் பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்ய, தகுதியும் அர்ப்பணிப்பும் உள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2026-03-28ஆம் திகதிய 02/2026ஆம் இலக்க முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் (MSD) சுற்றறிக்கை 1ஆம் இணைப்பு, 1ஆம் நிரலில் விபரிக்கப்பட்டுள்ள அடிப்படைத் தகுதிகள் மற்றும் அனுபவத் தேவைப்பாடு மற்றும் 2ஆம் இணைப்பு, 1ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பதவிகளுக்கான சம்பளம் அமையும்.

**வெற்றிடங்களின் விபரங்கள்**

| இல. | விபரங்கள் | சம்பள வகுதி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | திட்டப் பணிப்பாளர் | A | 01 |
| 02 | சிரேஷ்ட சிவில் பொறியியலாளர் | C | 01 |
| 03 | பெறுகை மற்றும் ஒப்பந்த முகாமைத்துவ நிபுணர் | C | 01 |
| 04 | கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நிபுணர் | C | 01 |
| 05 | நிதி முகாமைத்துவ நிபுணர் | C1 | 01 |
| 06 | சுற்றாடல் இடர்காப்பு (Safeguards) அதிகாரி | F | 01 |
| 07 | சமூக இடர்காப்பு (Safeguards) அதிகாரி | F | 01 |

**பொது நிபந்தனைகள்**

- விண்ணப்பதாரர்கள் 64 வயதிற்குக் குறைந்தவர்களாக இருக்க வேண்டும். ஆங்கிலத்தில் தேர்ச்சியுடன் அரசாங்க ஒழுங்குமுறைகளில் பரீட்சயம் மற்றும் கணினி அறிவு அவசியமாகும். இயைபுடைய துறையில் இலங்கையில் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு நிதியிலான திட்டங்களில் உள்ள வேலை அனுபவம் மேலதிக அனுகூலமாக அமையும்.
- தற்போது அரசாங்கம் / அரசு சார்ந்த துறைகளில் உள்ள விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை தொடர்புடைய தங்களின் திணைக்களத் தலைவரினூடாக அனுப்ப வேண்டும்.
- மேலதிக தகவல்களுக்கு www.irrigationmin.gov.lk எனும் இணையதளத்தை Log செய்யவும்.
- மேற்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையை நிதி அமைச்சின் இணையதளத்தில் பார்வையிடவும்.
- ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியான விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக குறிப்பிட்டு கீழ்வரும் முகவரிக்கு 2026.06.12ஆம் திகதிக்கு அல்லது அதற்குமுன் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும்.

**மேலதிக செயலாளர் (PPM அலகு),**<br>**கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,**<br>**10ஆவது மாடி, இலங்கை மகாவலி அதிகாரசபைக் கட்டிடம்,**<br>**இல. 500, T.B. ஜாயா மாவத்தை,**<br>**கொழும்பு - 10.**

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் நேர்முக தேர்விற்கு அழைக்கப்படுவர். நியமன செயல்முறையை பாதிக்கும் எத்தகையதொரு தலையீடோ அல்லது பிரதிநிதித்துவமோ குறித்த விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படுவதற்கு ஏதுவாக அமையும்.

**செயலாளர்,**<br>**கமத்தொழில், கால்நடை வாங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**